பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

Registered as a Newspaper பக்கங்கள்: 4 விலை ரூபா 5·00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | ஆடி 17 | 02-08-94 | செவ்வாய்க்கிழமை | ஓசை 165

## புலிகளின் நிர்வாக சேவை வவுனியாவில் ஆரம்பிக்கப்பட்டது

வவுனியாவில் தமிழீழ விடுதலைப் புலிகளினால் நிர்வாக சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கடந்த சனிக்கிழமை சம்பிரதாயபூர்வமாக இதன் செயற்பாடுகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன. தமிழீழ அரசியல் துறைத் துணைப் பொறுப்பாளர் திரு. கரிகாலன் தமிழீழத் தேசிய கொடியை ஏற்றி நிகழ்வினை ஆரம்பித்து வைத்தார். விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள், அரச அதிகாரிகள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் உட்படப் பெருமளவினர் இந்நிகழ்வில் கலந்து (4ஆம் பக்கம் பார்க்க)

## ஆறரைலட்சம் வாக்குச்சீட்டு தெல்லிப்பழைக்கு வரும்

வாக்குச் சீட்டுக்கள் அச்சடிக்கும் பணிகள் முடிந்து விட்டதாகவும், மாவட்ட தேர்தல் அலுவலர்களுக்கு அவை அனுப்பப்பட்டு வருவதாகவும் அரச அச்சகர் நெவில் நாணயக்கார தெரிவித்துள்ளார்.

ஆறுலட்சத்து ஐப்பதினாயிரம் வாக்குச் சீட்டுக்கள் யாழ் தேர்தல் மாவட்டத்துக்காக அச்சிடப்பட்டுள்ளதாகவும் இவை விரைவில் தெல்லிப்பழைக்கு எடுத்துச் செல்லப்பட இருப்பதாகவும் தெரிய வருகிறது. வாக்களிப்புநிலைய அனுமதி அட்டைகளும், எதிர் வரும் 5, 6, 7-ம் திகதிகளில் வாக்காளர்களுக்கு கிடைக்கக் கூடிய வகையில் அனுப்பப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது,

# கொழும்பில் புலிகள் ஊடுருவல்! புதிய பாணி பாதுகாப்புஏற்பாடு!

## பூநகரி படை முகாமின் பாதுகாப்பை தீவிரப்படுத்த ஜெரி டி சில்வா உத்தரவு

### சண்டே லீடர் தகவல்

(கொழும்பு)

பூநகரியில் உள்ள படையினரை தமது முன்னிலை அரண்களிலிருந்து அப்பாலுள்ள சூனியப் பிரதேசத்திலும் ரோந்து நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு அப்படையினரை இராணுவத் தளபதி ஜெரி டி சில்வா பணித்துள்ளார். இது பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டதைக் காட்டுவதாக சண்டேலீடர் பத்திரிகையின் பாதுகாப்புத் துறை செய்தியாளர் குறிப்பிட்டுள்ளார்.

பூநகரி காவலரண்களில் மழைகாலத்தில் நீர் உட்புகுவதால் பிரச்சினைகள் ஏற்படும் - அதேசமயம் வரண்ட காலப் பகுதியில் உலர்ந்த மண் காற்றோடு அள்ளப்பட்டு தமது உணவுகள் பாழடைவதாக அங்குள்ள காவலரண் படையினர் தம்மிடம் முறையிட்டதாகவும் அச் செய்தியாளர் குறிப்பிடுகிறார்.

இதேவேளை கடந்த நவம் (4ஆம் பக்கம் பார்க்க)

## பயிலுநருக்கு நிரந்தர நியமனம்

சண்டிலிப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலைகளில் கற்பிக்கும் 72 பயிலுநர் ஆசிரியர்களுக்கும் தெல்லிப்பழைக் கல்விக் கோட்டப் பாடசாலைகளில் கற்பிக்கும் 74 பயிலுநர் ஆசிரியர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இதற்கான கடிதங்கள் கோட்டப் பணிமனையில் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுக்கு வழங்கப்படுவதாகக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. த. துரைசிங்கம் அறிவித்துள்ளார்.

## பாதுகாப்பு அமைச்சு அதிகாரி தகவல்

(கொழும்பு)

தேர்தல் நடவடிக்கைகள் உச்ச கட்டத்தை அடைந்துள்ளஇவ் வேளையில் விடுதலைப் புலிகளின் முக்கியஅணி ஒன்று கொழும்பிற்குள் ஊடுருவியிருப்பதாகவும், இதைத்தொடர்ந்து புதிய பாணியிலான பாதுகாப்புஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதுகுறித்து தகவல் வெளியிட்டுள்ள 'லங்காதீப' என்னும் வாரப்பத்திரிகை,

தேர்தல்நடவடிக்கை உச்ச கட்டத்தை அடைந்துள்ளஇவ் வேளை விடுதலைப் புலிகளின் முக்கியஅணியொன்று கொழும்புக்கு ஊடுருவி இருப்பதாக இரகசிய பொலிசாருக்கு தகவல் கிடைத்திருப்பதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து எதிர்வரும் நாட்களில் கொழும்பில் புதிய பாணியிலான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள பொலிஸ் தலைமை அலுவலகம் முடிவு செய்துள்ளதாக மேலும் தெரிவித்தது.

விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளுக்கு முகம் கொடுக்கும் வகையில் தமது புதிய பாதுகாப்புச் செயற்பாடுகள் அமையும் என்றும் அவ் அமைச்சு வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

## கலிபர் தாக்குதல்

இன்று அதிகாலை 12-35 மணியளவில் மண்டைதீவு பகுதியில் இருந்து இராணுவத்தினர் யாழ் நகரின் கரையோரப் பகுதிகளை நோக்கி சரமாரியான கலிபர் தாக்குதலை மேற்கொண்டவண்ணம் இருந்தனர், பரா வெளிச்சக் குண்டுகளும் ஏவப்பட்டன. இதனால் ஏற்பட்ட சேத விபரங்கள் தெரியவரவில்லை.

## கடற்படையினரின் தாக்குதலால் புதுக்குடியிருப்பு கடற்பரப்பில் மீனவர் ஒருவரைக்காணவில்லை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினர் மேற்கொண்ட கண்மூடித்தனமான தாக்குதல்களினால் படகொன்று முற்றாக நாசமாகியதுடன் மீனவர் ஒரு... ளார்.

நேற்று முன்தினம் அதிகாலை 1.30 மணியளவில் புதுக்குடியிருப்பின் கடற்பரப்பில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த மீனவர்கள் மீதே கடற்படையினர் இத் தாக்குதலை... களை அண்மித்த கடற்படையினர் திடீர்த் தாக்குதலை மேற்கொண்டனர். இதன் போது மீனவர்கள் கடலில் குதித்து தாக்குதலிலிருந்து தப்பினர். படையினர் மீன்பிடி உபகரணங்களுடன் சேர்த்து இவர்களது ப...

## உயர் அதிகாரிகள் பாதுகாப்பு பலப்படுத்த நடவடிக்கை

(கொழும்பு)

வெளிநாட்டுப் பிரசைகளாகக் கருதப்படும் அரசியல்வாதிகளினதும் உயர்பதவி வகிக்கும் அதிகாரிகளினதும் பாதுகாப்பைப் பலப்படுத்த சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இவர்களின் உயிருக்கும் உடைமைகளுக்கும்ஊறுவிளைவிக்கப்பட வரும் என தகவல்... எடுத்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் சிரேஷ்ட அதி (4ஆம் பக்கம் பார்க்க)

## பேரினவாதிகளுக்கு எதிராக ஒன்றிணைந்து போராடுவோம்

மான தாக்குதல்களினால் படகொன்று முற்றாக நாசமாகியதுடன் மீனவர் ஒருவரும் காணாமல் போயுள்

ஈடுபட்டுக் கொண்டிருந்த மீனவர்கள் மீதே கடற்படையினர் இத் தாக்குதலை நடத்தினர். மீனவர் படகு

தப்பினர். படையினர் மீன்பிடி உபகரணங்களுடன் சேர்த்து இவர்களது பட

(4ஆம் பக்கம் பார்க்க)

இவர்களின் உயிருக்கும் உடைமைகளுக்கும்ஊறுவிளைவிக்கப்படலாம் என தகவல் கிடைத்ததைத் தொடர்ந்து தமக்கு பாதுகாப்பு வழங்குமாறு பல அதிகாரிகள் வேண்டுகோள் விடுத்திருந்தனர்- இதனையடுத்து பாதுகாப்பு அமைச்சு இந்நடவடிக்கையை

# வல்வை கரையோரம் நோக்கி டோரா படகிலிருந்து தாக்குதல்

(வடமராட்சி)

வடமராட்சி வடக்கு கடற்பரப்பில் ரோந்து சென்ற சிறிலங்கா கடற்படையினர் பொலிகண்டி, வல்வெட்டித் துறைப் பகுதிகள் மீது கடும் பீரங்கித்தாக்குதலை மேற்கொண்டனர்.

வெற்றிலைக்கேணி யிலிருந்து காங்கேசன்துறை நோக்கிச் சென்ற 'டோரா' படகிலிருந்து இப் பீரங்கித் தாக்குதல்கள் நடைபெற்றன.

பொலிகண்டி, வல்வெட்டித் துறைக் கடற்பரப்பில் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்களை இலக்குவைத்துநேற்றுக் காலை 7.45 மணியளவில் தாக்குதல் நடைபெற்றது.

இத்தாக்குதல் சம்பவத்தையடுத்து மீனவர்கள் தமது உபகரணங்களை கடலில் விட்டு விட்டு நீந்திக்கரை சேர்ந்தனர்.

அதேசமயம் நேற்றுக்காலை 8.45 மணியளவில் பலாலியிலிருந்து வந்த உலங்குவானூர்தி ஒன்று உடுப்பிட்டி, தொண்டமனாறு குடியிருப்புப் பகுதிகளை வட்டமிட்டு நோட்டமிட்ட பின்னர் பலாலியில் தரை இறங்கியது.

(யோ)

# மீன்பிடி படகுகள்மீது கடற்படை தாக்குதல்

## வள்ளங்களை கைவிட்டு மீனவர் தப்பினர்

(யாழ்ப்பாணம்)

நாகர்கோவில் கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இரண்டு மீன்பிடிப்படகுகள்மீது சிறிலங்கா கடற்படையினர் தாக்குதல் நடாத்தியுள்ளனர்.

இதனை அடுத்து மீனவர்கள் இரண்டு பிளாஸ்ரிக் படகுகளையும் மீன் பிடி உபகரணங்களையும் கடலில் கைவிட்டு நீந்திக்கரை வந்து சேர்ந்துள்ளனர்.

இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது, ஒவ்வொரு பட

(4ஆம் பக்கம் பார்க்க)

# இன்று படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.



லெப். உலகப்பன்
(சாம்ராஜ்)

## வீரச்சாவு

பூநகரிப் பகுதியில் கடந்த மாதம் 30-ம் திகதி சனிக்கிழமை சிறிலங்கா இராணுவத்தினருடன் இடம்பெற்ற திடீர் மோதலில் விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

வீரச்சாவடைந்த லெப்டினன்ட் உலகப்பன்/சாம்ராஜ் (இராசநாயகம் யூட் அன்ரனி, இல. 19, பீச்றோட், குருநகர், யாழ்ப்பாணம்) என்னும் போராளிக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

## சந்திக்கவும்

ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு பரீட்சை நிலைய மேற்பார்வையாளர்களாக நியமிக்கப்பட்டுள்ள அனைவரையும் அவ்வக் கோட்டங்களுக்கு பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர்களை நாளை பிற்பகல் 5:00 மணிக்குச் சந்திக்குமாறு யாழ். வலயம் 1 கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

# ஒன்றிணைந்து போராடுவோம்

## பிரபாகரனுக்கு அஷ்ரப் கடிதம் எழுதியுள்ளாராம்

(கொழும்பு)

சிங்களப் பேரினவாதப் படைகளுக்கு பாரிய தாக்கத்தை ஏற்படுத்த இணைந்து முயற்சி எடுக்கவேண்டும் என்றும் தமிழர், முஸ்லிம்களிடையே ஆரோக்கியமான உறவு இருப்பதனை சிங்களப் பேரினவாதச் சக்திகள் அனுமதிக்கமாட்டா என்றும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம். எச். எம். அஷ்ரப் விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனுக்கு எழுதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக சண்டேலீடர் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்

(4ஆம் பக்கம் பார்க்க)

# மர்ம விமானத்தினால் கொழும்பில் பரபரப்பு

(கொழும்பு)

கொழும்புக்கு அண்மையில் தாழ்வாக பறந்த விமானம் ஒன்று கடந்த திங்கட்கிழமை இரவு சிறிலங்கா பாதுகாப்பு அமைப்புகளை பரபரப்பிற்கு உள்ளாக்கியது.

இவ் விமானம் இரவு 9.15 மணியளவில் இந்து சமுத்திரத்திற்குள் பிரவேசித்து கொழும்புக்கு அண்மையில் தாழப் பறந்தமை கொழும்பிலுள்ள 'ராடர்' திரையில் அவதானிக்கப்பட்டது. கொழும்பிற்கு மேற்கே இருபது மைல் தொலைவில் ஆறாயிரம் அடி உயரத்தில் பறந்து கொண்டிருந்த இவ் விமானம் பற்றிய தகவலை இரத்மலானையில் அமைந்துள்ள

(4ஆம் பக்கம் பார்க்க)

# ஐ.தே.கவின் இறுதிக்காலம் இரத்தக்கறை படிந்தது

(கொழும்பு)

இலங்கைத் தீவின் வரலாற்றில் ஐ-தே- கட்சியின் கடைசித் தசாப்தகால ஆட்சி கடும் இரத்தக்கறை பூசப்பட்டதாகவுள்ளது என கொழும்பு பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சிறிலங்கா படைகளுக்கு வறிய சிங்களக் குடும்பங்களிலிருந்து இளைஞர்கள் சேர்க்கப்படுகின்றனர். ஏழைச் சிங்கள இளைஞர்கள் சிங்கள மேல் வர்க்கத்தினரின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக தமது உயிரையும் அங்கங்களையும் இழக்கின்றனர் எனவும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

ஒட்டு மொத்தமாக ஐ. தே. கட்சியின் கடந்த 17 வருட ஆட்சிபற்றி எதுவுமே புகழ முடியாதுள்ளது. வடக்கு-கிழக்கு யுத்தம் பலத்த இழப்புகளுடன் தொடர்கிறது 8000ற்கும் மேலான படையினர் செய

(4ஆம் பக்கம் பார்க்க )

## ஐ. நா. அபிவிருத்திச் சபையால்

# இரண்டு வைத்தியர்களே வடபகுதிக்கு நியமனம்

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய நாடுகள் அபிவிருத்திச் சபையினர் வடபகுதிக்கென இரண்டு டாக்டர்களையே நியமிக்க முன்வந்துள்ளனர்.

நேற்று முன்தினம் யாழ். போதனா மருத்துவமனை அதிகாரிகளுடன் நடாத்திய பேச்சுவார்த்தையின் போது மேற்படி விடயத்தை தெரிவித்ததாக தெரியவருகின்றது.

இதனால் யாழ். மாவட்ட வைத்திய வட்டாரங்கள் அவ்வளவாக திருப்தி கொண்டிருப்பதாக தெரியவில்லை.

(4ஆம் பக்கம் பார்க்க)

# ஐக்கிய தேசியக் கட்சிக்காக ஹேமா ரகசிய பிரசாரம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சிக்காக இரகசியமான வாக்குவேட்டையில் இறங்கப் போவதாக ஹேமா பிரேமதாசா சண்டேலீடருக்கு தெரிவித்துள்ளார்- அமைதியாக ஆனால் கடுமையாக ஐ-தே-க வெற்றிக்காக உழைக்கப் போவதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்-

இதற்கிடையில் முன்னாள் கொழும்பு மேயர் ரட்ணசிறி ராஜபக்ச, கடந்த வாரம் சண்டே லீடருக்கு அளித்த பேட்டியில், தான் பாராளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்றதும் ஹேமா பிரேமதாசாவுக்கு, இடம்கொடுப்பதற்காக தனது பதவியை இராஜினாமா செய்யப்போவதாகவும் இதனால் தனது கணவரின் தொகுதியான கொழும்பு மத்தியின் பிரதிநிதித்துவத்தை அவர் பெறு

(4ஆம் பக்கம் பார்க்க)

# எதிர்வரும் பொதுத் தேர்தலில் எந்த கட்சியும் பெரும்பான்மை பெறாது

## சண்டேரைம்ஸ் கருத்துக் கணிப்பு இது

(கொழும்பு)

தென்னிலங்கையில் நடத்தப்பட்ட தேர்தல் கருத்துக் கணிப்பில் 44.1 சதவீதத்தினர் ஐ. தே. கவிற்கு ஆதரவு தெரிவித்துள்ள அதேசமயம் 21.1 சதவீதத்தினர் பொது ஜன ஐக்கிய முன்னணிக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர் 28.8 சதவீதமானோர் தமது தெரிவை வெளியிட மறுத்து விட்டனர்.

இக் கருத்துக்கணிப்பை மேற்கொண்ட மிற்றோவ்ஸ்கி என்ற வாக்கெடுப்பு நிறுவனம் கருத்து வெளியிடுகையில், கருத்து வெளியிட மறுத்த 28.8 சதவீதமானோரில் பெரும்பாலானோர் பொது ஜன ஐக்கிய முன்ன

(4ஆம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள ரைக்டர் கலப்பை (AUSTRALIAN) விற்பனைக்குண்டு தொடர்பு:- நீதிராஜா, தபால் கந்தோர் வீதி சாவகச்சேரி (8976)

## விற்பனைக்குண்டு

10x5 அடி நீளமுள்ள கூடொன்றும் சைனா பான் ரெயிலும் (வெள்ளை, கோப்பி) ஆண் சடை முயலொன்றும் விற்பனைக்குண்டு, த. செல்வக்குமார், சந்திரசேகரப் பிள்ளையார்வீதி நல்லூர் வடக்கு. (8988)

## ஜெய்ப்பூர் கடன் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

ஜெய்ப்பூர் செயற்கை அவயவ பாவனையாளர்களுக்கு சுயதொழில் முயற்சிக்கான கடன் வழங்குவதற்காக, யாழ் ஜெய்ப்பூர் நிறுவனம் விண்ணப்பங்களை கோரவுள்ளது.

ஏற்கனவே, முதற்கட்டமாக பதினான்கு, ஜெய்ப்பூர் செயற்கை அவயவ பாவனையாளர்களுக்கு சுயதொழில் முயற்சிக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

இரண்டாவது கட்ட கடன் வழங்கலுக்கான நிதியினை வெளிநாட்டு தொண்டர் நிறுவனங்களிடமிருந்து யாழ் ஜெய்ப்பூர் நிறுவனம் பெற முயற்சி மேற்கொண்டுள்ளது.

(பா), (நி)

## ரி.வியின் விலை அதிகரிப்பு

(கொழும்பு)

தேர்தல் நெருங்குவதையடுத்து பழைய கார்கள், தொலைக்காட்சி பெட்டிகள், வானொலிகள் என்பவற்றின் விலைகள் அண்மைக்காலமாக கொழும்பில் அதிகரிக்கின்றது வானொலி, தொலைக்காட்சி என்பவற்றின் விலை 30 சதவீதத்தினாலும் கிராமப்புறங்களில் 50 சதவீதத்தினாலும் அதிகரித்துள்ளது.

இவ்விலைகள் மேலும் அதிகரிக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## கண்டெடுப்பு

தர்மலிங்கம் நடேசமூர்த்தி

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

பட்டப்பின் டிப்ளோமா

பொது நிர்வாகம்

## இரண்டாம் அரையாண்டுப் பரீட்சை- 1993

மேற்படி பிற்போடப்பட்ட பரீட்சை பின்வரும் நேர அட்டவணைப்படி 15-08-94-ம் திகதி தொடக்கம் 20-08-94-ம் திகதிவரை நடைபெறும். பரீட்சை அனுமதி அட்டையினைப் பெறாதவர்கள் பரீட்சைக் கிளையில் 12-08-94ற்கு முன்பாகப் பெற்றுக்கொள்ளும்படி வேண்டப்படுகின்றீர்கள்.

| Date | Subject |
|---|---|
| 15.08.94 | pg. Ad 103 Management of public Enterprises |
| 16.08.94 | pg Ad 104 Administrative Theories |
| 17.08.94 | pg Ad 106 Development Theories and Strategies |
| 18 08.94 | Pg Ad302 Communication in Administration |
| 19.08.94 | pg.Ad 303 Administrative law |
| 20.08.94 | pg. Ad 502 Introduction to Computing |

பதிவாளர்

(சி.10019)

---

## 20-வது பிறந்த நாள் நினைவலைகள்

2-08-1994



கடற்புலி லெப். தூயவன்

(மகாலிங்கம் ஜெயலிங்கம்)

---

## பல்கலைக்கழக அணி 2-0 கோல் கணக்கில் வெற்றி

யாழ் ரோட்டரிக் கழகம், எஸ். எம். பெர்ணாண்டோ நிறுவனத்தின் ஆதரவில் நடாத்தப்பட்டு வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் சென்ற் அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மோதிய யாழ். பல்கலைக்கழக அணி அரையிறுதி நேரத்திற்கு முன்னரே 2-0 என்ற கணக்கில் கோலை போட்டு வெற்றியை தமதாக்கி கொண்டது

இவ்விறுவிறுப்பான ஆட்டத்தில் யாழ் பல்கலைக்கழக அணியின் வீரன் அன்ரன்சிசில் ரசிகர்களை கவரக் கூடிய விதத்தில் மிகவும் கவர்ச்சியாக விளையாடினார்.

யாழ் சென்ற் அன்ரனிஸ் விளையாட்டுக் கழக வீரர்கள் இறுதிவரை உச்சமாக விளையாடியபோதும் பல்கலைக்கழக அணியினரின் கப்டன் எஸ். ஈ. கென்றிசன், உப கப்டன் தயானந்தன் ஆகியோரின் திறமையான விளையாட்டால் எவ்வித கோலையும் போடமுடியாமல் போனது குறிப்பிடத்தக்கது. (05)

---

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### லெப்டினன்ட் தில்லைச்செல்வி

(நித்தியானந்தம் பிறேமானந்தி நந்தினி)

பிறப்பு: 17-08-1973 வீரச்சாவு: 02-8 1993

என் அன்பு மகளே எம்மையும் எமது மண்ணையும் காப்பாற்றச்சென்று வீரச்சாவைத் தழுவிக் கொண்டாய் உம்மை பெற்ற தாய், தந்தையர் நாம் பெருமை அடைகின்றோம் உமது பணியைத் தொடருவோம்.

(தாய், தந்தையர்)

என் அன்பு மாவீரர்களே

உங்கள் கனவை நெஞ்சிலும் ஆயுதங்களைக் கையிலும் சுமக்கின்றோம் உங்கள் பாதச்சுவடுகள் எமக்கு வழிகாட்டுகின்றன.

(சிறியதந்தை)

தலைவரின் இதயத்துடிப்பு:

நான் உயிருக்கு உயிராக நேசித்த தோழர்கள், என்னுடன் தோளோடு தோள் நின்று போராடிய தளபதிகள், நான் பல்லாண்டு காலமாக வளர்த்தெடுத்த போராளிகள் களத்தில் வீழ்ந்த போதெல்லாம் எனது இதயம் வெடிக்கும். ஆயினும் சோகத்தால் நான் சோர்ந்து போவதில்லை. இந்த இழப்புக்கள் எனது இலட்சிய உறுதிக்கு மேலும் மேலும் உரமூட்டி இருக்கின்றது.

-திரு. வே. பிரபாகரன்

செ நித்தியானந்தம்

போராளி: செ. புலிமர்மா (யோகநாதன்)

தொல்புரம் மத்தி

சுழிபுரம் (8986)

---

## வீதியின் மருங்கிலுள்ள மரங்கள் வெட்டி அழிப்பு

பாதுகாப்பு காரணமாம்

(வாழைச்சேனை)

மட்டக்களப்பில் புலிகளின் தாக்குதலில் இருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்ளும் நோக்குடன் சிறிலங்கா பொலிசார் அங்குள்ள காடுகளைப் பெருமளவில் அழித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

வாழைச்சேனை - கல்குடா வீதியில் ஒரு மைல் தூர வீதியின் இருமருங்கிலும் உள்ள காடுகளையே பொலிசார் வெட்டி அழித்து வருகின்றனர். சில தினங்களாக சாதாரண உடை தரித்த பொலிசார் இப்பணியில் ஈடுபட்டு வருவதாக தெரிய வருகிறது.

தேர்தல் கால விசேட பாதுகாப்பு மற்றும் விடுதலைப் புலிகளின் ஊடுருவல்களை தவிர்ப்பதுமே இதன் நோக்கம் என சுட்டிக் காட்டப்படுகிறது. அத்துடன் வாழைச்சேனை பெற்றோல் நிலைய சந்தியிலிருந்து கறுவாக்கேணி வரையான வீதி பற்றைகளும் பொலிசாரால் வெட்டப்படுகின்றனவாம்,

---

## நினைவு கூருகின்றோம்...

02-08-1994.

1986-ம் ஆண்டு இதேதினத்தில் மன்னார் - அடம்பன் பகுதியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடி விபத்தில் எமைப் பிரிந்த,

**சுனில்** (யாக்கோப்பு போசப் குரூஸ் பெனடிக்ற்-சிறுகுளம், பறப்பாங்கண்டல் - மன்னார்)

**விசு** (தம்பாப்பிள்ளை லிங்கநாதன் - மாளிகைத்திடல், அடம்பன் - மன்னார்)

**சங்கர்** (வேலுப்பிள்ளை செல்வம் - 5-ம் கட்டை - மன்னார்)

**விசுவநாத்** (சுந்தரம்பிள்ளை ஞானேந்திரன் - வட்டக்கண்டல் - மன்னார்)

**தீபி** (ஜெரோனிமோஸ் அனெக்கிளிற்றஸ் லினா-வங்காலை - மன்னார்)

**காந்தன்** (செல்வராசா காந்தன் சகாயவீதி, அடம்பன் - மன்னார்)

**சசி** (றேமன் ஜோன் லெஸ்லி - அடம்பன் - மன்னார்)

1988-ம் ஆண்டு மருதங்கேணியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**வரதன்** (சச்சிதானந்தசிவம் சின்னத்தம்பி-மாமுனை வடக்கு, செம்பியன்பற்று - வடமராட்சி)

1990-ம் ஆண்டு யாழ் வசாவிளானில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வாகனவிபத்தில் எமைப் பிரிந்த,

**மேஜர் சூட்டி** (சீவரத்தினம் சிறீதரன் - தையிட்டி, காங்கேசன்துறை - யாழ்)

மட்டு- புல்லுமலைப் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய,

**தனம்** ( - 37-ம் குடியிருப்பு - மட்டு)

திருமலை - ஜெயபுரம் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**லெப். சுந்தர்** (இராமசாமி சதாசிவம் - கப்பல்துறை

என்பவரது அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு எமது அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் வந்து பெற்றுக் கொள்ளவும்.

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
**இசைக்கலைமணி/ நாட்டியக்கலைமணி (டிப்புளோமா)**
**புதிய அனுமதிகள்**
**1993 / 1994**

வட இலங்கை சங்கீத சபையின் நான்காம் தரப் பெறுபேறுகள் வெளிவரத் தாமதமான படியினால் மேற்படி அனுமதிகளுக்கான விண்ணப்ப முடிவுத் திகதி ஆகஸ்ட் 31-ம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. முன்பு விண்ணப்பித்தவர்கள் விண்ணப்பிக்கத் தேவையில்லை. ஆனால் சித்தியடைந்த பெறுபேற்றுடன் பரீட்சைக் கிளையுடன் தொடர்பு கொள்ளவும். விண்ணப்பிக்காதவர்கள் 20/- செலுத்தி பரீட்சைக் கிளையில் விண்ணப்ப் படிவங்களைப் பெற்று 31. 08. 1994 க்கு முன்னர் விண்ணப்பிக்கவும். இத் திகதிக்கு பிந்திய விண்ணப்பங்களும் தகுதி பெறாதவர்களின் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

-பதிவாளர்
(சி/10018)

(மகாலிங்கம் ஜெயலிங்கம்)

வங்கக் கடலில் ஆற்றல் மிகு
தளபதி கிட்டண்ணாவுடன்
தேசத்தின் விடிவிற்காய்
தென்றலாய் வீசி வந்தாய்
பாசத்தின் தூயவனே உன்னை
பூஜித்து நாம் நிற்போம்.

மம்மி, டடா
நண்பன்
சு. சியலோகநாதன் (குட்டி)

(8992)

# 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்:
06 - 10 - 1935

விண்ணில்:
14 - 08 - 1993

திதி:
02 - 08 - 1994


## திரு. மார்க்கண்டு தம்பிராசா

அன்பின் திருவுருவாய் பண்பின் உறைவிடமாய் பாசத்தின் இருப்பிடமாய். குடும்பத்தின் ஒளிவிளக்காய் இருந்து திடீரென மறைந்துவிட்ட எம் இனிய தெய்வமே! தாங்கள் நிழல் தரும் ஆலமரம் என நினைத்திருந்தோம் - அப்பா நிலையான நிழல்தேடி இறைவனடி சேர்ந்து விட்டீர்கள். ஆண்டு ஒன்று மறைந்தாலும் உங்கள் கனவுகளை எங்கள் நெஞ்சங்களில் சுமந்து என்றென்றும் உங்கள் பாச நினைவுடன் வாழுவோம். அதுவரை உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

பூதராயர் கோவிலடி,
உரும்பராய் கிழக்கு,
உரும்பராய். (8993)

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
மருமகள், பேரப்பிள்ளை.

# 31-ம் நாள் நினைவலைகள்



மண்ணகம்
25-07-48

விண்ணகம்
03-07-94

## திரு. உலகேசு இராசரத்தினம்
(உரிமையாளர், 66சிறீ81 வான்)

கரைகடந்து பாய்கின்ற கங்கைப் பெருக்காக
எம்மைவளர்த் துருவாக்கிக் காத்திட்ட தெய்வமே
நெஞ்சுருகிக் கண்ணீரை நிலமேலே சிந்துகிறோம்.
தஞ்சமென இருந்தவரே தவிக்கவிட்ட காரணம்ஏது
இதயம் இருக்கும் மட்டும் எம்மன்பு வடிவானவரே
மறக்க முடியாதே எம் கண்ணீரின் அஞ்சலி
தருகிறோம்.

உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் 02-08-94 காலை 7 00 மணிக்கு நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையிலும், மதிய உணவிலும் கலந்து சிறப்பிக்க அழைக்கிறோம்.

'குளானை',
துன்னாலை தெற்கு,
கரவெட்டி. (8990)

மனைவி, மக்கள், தாய்,
உறவினர்.

**லெப். சுந்தர்** (இராமசாமி சதாசிவம் - கப்பல்துறை - திருமலை)
**குட்டி** (கந்தையா விநாயகமூர்த்தி - தம்பலகமம் - திருமலை)
**ரஞ்சித்** (பொன்னையா அன்ரன்-சகாயகுமார்-சீனன்குடா - திருமலை)
**தயாளன்** (நல்லலிங்கம் கிருபானந்தம் - வர்ணமேடு, தம்பலகமம் - திருமலை)
**சுகந்தன்** (க ஆனந்தராசா - கட்டைபறிச்சான்-திருமலை)

கிளிநொச்சி - பரந்தன் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத்தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**சிவன்** (தில்லையம்பலம் சிவனேசன் - சிவன்கோயில் வீதி, உருத்திரபுரம் - கிளிநொச்சி)
**ஜெனனன்** (தி. ஜெயேந்திரன்-குஞ்சுப்பரந்தன், பரந்தன் - கிளிநொச்சி)

இதேபகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய,

**மென்டிஸ்** (மங்களம் சந்திரசேகரம்-4-ம் வாய்க்கால் - கிளிநொச்சி)

1991-ம் ஆண்டு மட்டு - கன்னிச்சை வடமுனைப் பகுதி முகாமிலிருந்து வெளியேறிய சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய

**லெப். ஜெயந்தன்** (விநாயகமூர்த்தி விஜயகுமார் - கடற்கரைவீதி, திருக்கோயில் - அம்பாறை)

1993-ம் ஆண்டு யாழ். எழுதுமட்டுவாள் பகுதியில் தவறுதலாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப் பிரிந்த,

**லெப். தில்லைச்செல்வி-சந்தியா** (பிறேமாவதி நித்தியானந்தம் - பொன்னாலை மேற்கு-சுழிபுரம்)

இதேதினத்தில் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசங்களிலும், கடற்பரப்பிலும் சிறிலங்கா - இந்திய ப்படைகளினாலும், தேசவிரோதிகளாலும் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமக்கள்.

**ஆகியோரை இந்நாளில்**
**நினைவு கூருகின்றோம்.**

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-10017)

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம் நல்லூர் கிளைநூலகம்

## சிந்தனைக்கு..

தான் விதைப்பதற்கு இணங்கவே
மனிதனால் அறுவடை செய்ய முடியும்.

- விவிலியம்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம், 02-08-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண்- 05

## அறுவடை

ஆகஸ்ட் 16இல் இடம்பெறவுள்ள பொதுத் தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னணி வெற்றி பெறலாம் என கருத்துக் கணிப்புக்கள் தெரிவிப்பவை எந்தளவிற்கு ஏற்கக்கூடியவையோ, இல்லையோ, ஆனால் தற்போதைய சில நிகழ்வுகள் இதனை ஊர்ஜிதப்படுத்துகின்றன போல் உள்ளன. அதாவது; ஐக்கிய தேசியக் கட்சியே உறுதி செய்வது போன்ற நிகழ்வுகள் இடம்பெறுவதாகத் தெரிகின்றது.

இந்த வகையிலேயே முன்னாள் ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளரும், வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சருமான சிறிசேன கூரே குடும்பத்துடன் நாட்டை விட்டு வெளியேறியதினைக் கொள்ள வேண்டியுள்ளது. சிறிசேன கூரே திரும்பி வருவார் என ஐ. தே. க. தரப்பினர் -பிரதமர் உட்பட - கூறினாலும் அதற்கான வாய்ப்புக்கள் குறைவு என்றே கருதப்படுகின்றது.

இதேசமயம் சிறிசேன கூரே திரும்பி வரமாட்டார் என்பதற்கான ஆதாரங்களே கூடுதலாக உள்ளன. இந்தவகையில் சிறிசேன கூரே கொழும்பிலுள்ள தனது இரு வீட்டையும் ஏற்கனவே விற்றுவிட்டார் என்பது முக்கியமானதொரு தகவலாகும்.

அத்தோடு, சிறிசேன கூரேயின் வழியைப் பின்பற்றி இன்னமும் பலர் சிறிலங்காவை விட்டு வெளியேற முற்படுவதாக அறிய முடிகின்றது. இந்தவகையில் பிரபல அரசியல்வாதிகளுடன் தொழிலதிபர்கள், அரசாங்க அதிகாரிகள் கூட இடம்பெறலாம் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இவர்கள் நாட்டை விட்டு வெளியேற ஏற்கனவே விமான பயணச்சீட்டுக்களைப் பெற்றுக் கொண்டுள்ளனர்.

ஒரு நாட்டின் சர்வாதிகாரியாக இருந்தோ, அன்றி இராணுவ ஆட்சியாளர்களாக இருந்தோ மக்கள் கிளர்ச்சி செய்யும்போது நாட்டைவிட்டு அவர்கள் வெளியேறுவது வழமையானதொன்றுதான். இதற்கு ஈரானில் இருந்து ஷா மன்னர் ஓடியது போன்று பல உதாரணங்களும் உண்டு. ஆனால் இது எதிர்பார்க்கக்கூடியதொன்றுதான்.

ஆனால், நாமே ஜனநாயகத்தின் காவலர்கள் என்றும், ஜனநாயகத்தை இரட்சிக்க வந்தவர்கள் என்றும் கூறிக்கொண்டு ஆட்சியில் இருப்பவர்கள், அதே ஜனநாயக பாரம்பரியத்தினால் மக்களால் இறக்கப்படும் போது நாட்டை விட்டு ஓட முற்படுவதுதான் வேதனைக்குரியதும், அவமானகரமானதுமாகும்.

# தாயகக் கோட்பாட்டை ஏற்றுக்கொள்ள முடியாது

## எப்.ஈ. பி. தேரோவுக்கு கடிதம்

(கொழும்பு)

இலங்கையை தமிழ், முஸ்லிம், இந்தியத் தமிழ், சிங்கள பிரதேசங்கள் எனப் பிரித்து அதிகாரத்தை பகிர்ந்தளிக்கும் இனவாத பிரிவினைவாத திட்டத்தை நாம் முழுமையாக நிராகரிக்கின்றோம். என மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்தனா மடிகே பஞ்சாசீக மகாநாயக்கதேரோவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது இலங்கையின் தலைவிதி சம்பந்தப்பட்ட இந்த பொதுத் தேர்தலின் முக்கியத்துவத்தையும் நாட்டினதும் இனத்தினதும் எதிர்கால உறுதிப்பாடு சம்பந்தப்பட்ட சிங்கள மக்களின் அக்கறையையும் நாம் உணர்கிறோம். இந்தப் பிரச்சினைக்குத் தீர்வாக சமர்ப்பிக்கப்பட்ட 1987 இந்திய-இலங்கை ஒப்பந்தம் நாட்டை பிரித்து விடக்கூடியது என நாம் அன்று முதல் எதிர்க்கின்றோம். ஜனாதிபதிகள் ஜே. ஆர். ஜெயவர்த்தனா, ஆர். பிரேமதாசா, டி. பி. விஜேதுங்கா ஆகியோரிடம் நாம் விடுத்த கோரிக்கைகளில் வடக்கு-கிழக்கு பகுதிகளை இரு பிரதேசங்களாக பிரகடனப்படுத்துமாறு கோரினோம். அது நிறைவேற்றப்படவில்லை அந்நிராகரிப்புகளின் விளைவையே இன்று நாடு எதிர்நோக்குகின்றது.

சங்கைக்குரிய மகாநாயக்க தேரோ எமக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டவாறு வடக்கு-கிழக்கு நெருக்கடிக்காக சமர்ப்பிக்கப்பட்ட தீர்வான மாகாணசபை முறையை ஒழித்து அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டு மாவட்ட மட்ட அதிகார பகிர்வு யோசனையை நாம் ஆதரிக்கின்றோம். பாரம்பரிய தாயகக் கோட்பாட்டை நாம் எதிர்க்கிறோம்.

நாட்டின் காணிக்கொள்கையாக நாட்டின் அனைத்து நிலங்களும் அரசின் பொறுப்பின் கீழ் இருக்கவேண்டும். நாட்டின் சட்ட ஒழுங்கைப் பாதுகாக்க முப்படையினரும் பொலிசாரும் துறைமுகம், விமான நிலையம் ஆகியன மத்திய அரசின் கீழ் இருக்க வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேர்தல் பிரசாரத்திற்காக

## வாகன அணிகளை பயன்படுத்தத் தடை

(கொழும்பு)

தேர்தல் பிரசாரத்துக்காக நீண்ட வாகன அணிகள் பயன்படுத்துவதைப் பொலிசார் தடை செய்துள்ளனர். இது தொடர்பாக அறிவுறுத்தல் விடுத்துள்ள பொலிஸ்மா அதிபர் வேட்பாளர்கள் ஆகக்கூடியது இரண்டு வாகனங்களையே பிரசாரங்களின் போது அணியாக கொண்டு செல்லலாம் எனத் தெரிவித்துள்ளார்.

## உலர்உணவு அட்டை மீளாய்வு செய்க

நல்லூர் பிரதேச செயலக பிரிவிலுள்ள அனைத்துக் குடும்பங்களினதும் 'அ', 'உ' உலர் உணவு அட்டைகள் கிராம சேவை அலுவலர்களால் மீளாய்வுசெய்யப்படவிருக்கின்றன. இதன்போது அனைத்துக்குடும்பங்களினதும் விபரங்கள் படிவ மூலம் சேகரிக்கப்படவுள்ளன. இவ்வாறு மீளாய்வு செய்யப்பட்ட அட்டைகளுக்கே அடுத்த கட்ட மண்ணெண்ணெய்வழங்கப்படவுள்ளதால் நல்லூர் பிரதேச செயலக பிரிவிலுள்ள மக்களை கிராம சேவை அலுவலர்களுக்கு பூரண ஒத்துழைப்பை வழங்கி அட்டைகளை மீளாய்வுக்குட்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

சிங்கள - ஆங்கில மொழி

## பொ.ஐ முவிஞ்ஞாபனத்தில் கொள்கை முரண்பாடு

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் சிங்கள, ஆங்கில மொழிகளில் வெளியிடபட்டவைக்கிடையே கருத்து வேற்றுமைகள் இருப்பதாக அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

சிங்கள விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதன்படி ரூபா 2000க்கு குறைந்த மாதாந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு ரூபா 1500 உட்பட்ட இலவச உணவுப் பொருட்கள் வழங்கப்படும் எனவும், வேலையற்ற இளைஞர்களுக்கு 1500 ரூபாயும் இலவச உணவும் வழங்கப்படும் எனவும் சிங்கள விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது இது வேலை கிடைக்கும் வரை வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் ஆங்கில விஞ்ஞாபனத்தில் வேறு வகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதாவது குறைந்த வருமானம் பெறுவோருக்கு ரூபா 2000 வழங்கப்படும் எனவும் ஆனால் குறைந்த வருமானம் என்பது இதில் வரையறை செய்யப்படவில்லை என்றும் எனவே இவ் இரண்டு கருத்து வேறுபாடுகள் குறித்து பொது ஜன ஐக்கிய முன்னணி மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும் எனவும் அவ் அரசியல் அவதானிகள் தெரிவித்தனர்.

## ஊமலை கட்டிக்கேட்டதற்கு

# தொல்லியல் கண்காட்சி; கலைஞானிக்கு கௌரவம்

(தென்மராட்சி)

தொல்பொருள்களை பாதுகாப்பதற்கென அமைக்கப்பட்ட அறங்காவல் குழுக்கள் உற்சாகம் ஊட்டக்கூடிய வகையில் செயல்படாமை என் நெஞ்சத்தை உருக்குகின்றது.

இவ்வாறு மாமனிதர் கலைஞானி அ. செல்வரத்தினம் அவர்கள் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இடம்பெற்றுவரும் தொல்பொருள் கண்காட்சியில் இடம்பெற்றபத்திரிகையாளர் சந்திப்பின் போது தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், இந்த பொக்கிசங்களை எனக்கு பின்னர் யார் பாதுகாப்பார்கள் என அச்சம் கொண்டுள்ளேன். இனி அடுத்து வரும் சந்ததி எமது நாட்டில் தொல் பொருட்களின் நிலைபற்றி அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கும். நான்61 வருடமாக இவற்றை சேகரித்தேன் என்றும்கூறினார்.

கண்காட்சியில் தொல் பொருள்களான சிலைகள், நவக்கிரகங்கள், பழைய பத்திரிகைகள், கல்விமான்களின் புத்தகங்கள், கலைஞானி அவர்களின் வீடு அரசினால் குண்டு வைத்து அழிக்கப்பட்ட போது அழிந்த புத்தகங்கள் ஆகியவற்றையும் காட்டும் புகைப்படம் முன்னைய காலத்தில் இருந்த புகைப்படத்துறையின் விளக்கம்போன்ற பலதும் காணப்பட்டன.

இதேவேளை கடந்த 30-ம் திகதி கலைஞானி அவர்களைக் கௌரவித்து சாவகச்சேரி இந்துக்கல்லூரி மாணவர், ஆசிரியர்கள் இணைந்து விழாவை எடுத்தனர். பாடசாலை அதிபர் திரு.க.சந்திரசேகரா தலைமையில் இடம்பெற்றது.

இதில் கலைஞானி அவர்களைப் பாராட்டி சி. சிதம்பரநாதக் குருக்கள், ஆசிரியர் திரு. நி. புகன் சிறிந்திரன் ஆகியோர் உரை நிகழ்த்தினர். (86)

இந்தியப்படை நடவடிக்கையினால்

## நெசவாளர் சங்கத்திற்கு 41 லட்சம் ரூபா நஷ்டம்

(யாழ்ப்பாணம்)

இந்திய இராணுவத்தின் இராணுவ நடவடிக்கையினால் யாழ் மாவட்ட புடவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு 41, 10960 ரூபா நஷ்டம் ஏற்பட்டதுடன் கூட்டுறவு நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருந்த சுமார் 1500 குடும்பங்கள் தொழில் வாய்ப்பின்றி பாதிப்படைந்தனர் என கணக்கெடுப்பொன்று தெரிவிக்கின்றது.

இதே சமயம், சிறிலங்கா இராணுவத்தினர் புடவை நெசவு உற்பத்திக்குரிய மூலப்பொருள்களை கொழும்பிலிருந்து யாழ். குடாநாட்டிற்கு எடுத்துவருவதற்கு தடைவிதித்திருப்பதனாலும் இத்தொழில் மேலும் யாழ். குடாநாட்டில் பாதிப்படைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (தி)

# உண்ணாவிரதத்தால் பயனில்லை என்றாலும் வேறு வழியில்லை

## புலிகளின் பாதுகாப்பிலுள்ள யுத்தக் கைதி தெரிவிப்பு

(லண்டன்)

இன்னும் ஓரிரு மாதங்களில் சிறிலங்கா அரசு தமது விடுதலைக்கான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படாத பட்சத்தில் தாம் உண்ணாவிரதப் போராட்டமொன்றை ஆரம்பிக்கப் போவதாக, பூநகரி முகாம் தாக்குதலின் போது

எதுவித பயனும் வரப்போவதில்லை. ஆனால் இதனைத் தவிர எமக்கு வேறுவழியில்லை அரசாங்கம்தான் அரசியல் நோக்கத்திற்காக எவ்வித முயற்சியும் எடுக்காவிட்டாலும் எம்மை இராணுவத்தில் சேர்த்துக் கொண்ட இராணுவ அதிகாரிகளுக்குக் கூட எம்மைப்பற்றிக் கவலையில்லை

நான் யுத்த வாகனங்கள் தரிப்பிடத்தில் இருந்து எட்டிப் பார்த்த போது அப்பகுதி முழுவதும் விடுதலைப் புலிகள் ஓடிவந்து கொண்டிருந்தனர். இவர்கள் தமிழில் கதைத்ததைக்கொண்டே புலிகள் என அறிந்து கொண்டேன்.

எனக்கு மிக அருகாக சன்னங்கள் பாய்ந்து சென்றது

குரியதும், அவமானகரமானதுமாகும்.

ஆனால், இதற்கு உலகில் பல உதாரணங்கள் இல்லாது விட்டாலும், சில உதாரணங்கள் இல்லாமல் இல்லை. இதில், பிலிப்பைன்ஸ் மார்க்கோர்ஸ் சிறப்பான உதாரணமாகும். ஊழல், மோசடி தேர்தல்கள் மூலம் தொடர்ந்து ஜனாதிபதிப் பதவியை இரு தசாப்தங்களுக்கு மேல் தக்கவைத்துக் கொண்ட மார்க்கோர்ஸை மக்கள் விரட்டியடிக்க வீதிகளில் இறங்க வேண்டியிருந்தது.

ஆனால், இன்று சிறிலங்காவில் மக்கள் வீதிகளில் இறங்கித் துரத்துவதற்கு முன்னரே ஓடிவிட ஐ. தே.க. சார்ந்தவர்கள் பலர் முயற்சிப்பது தமக்கும் அவ்வாறானதொரு நிலை உருவாகி விடுமோ என்ற அச்சத்தினாலேயே ஆகும். ஆனால், இவ்வாறான அச்சம் ஏற்படுவதற்கும், அவர்கள் வெளியேற முற்படுவதற்கும் காரணம் என்ன?

ஐ. தே. க. நடத்திய தேர்தலிலும், அதன் ஆட்சியிலும் மோசடியும், ஊழலும் இருந்ததாக முன்னர் பலர் கூறியபோது ஏற்றுக்கொள்ளாத ஐ தே. கவினர் தற்பொழுது அஞ்சுவதற்குக் காரணம் என்ன? தாமாகவே தமது ஊழல் மோசடி என்பனவற்றை ஏற்றுக் கொள்கின்றார்களா?

அல்லது இதுவரை மக்கள் தம் பக்கம் எனக் கூறிக் கொண்டவர்கள் தற்பொழுது மக்களால் தாக்கப்படுவோம் என தப்பி ஓட முற்படுவதற்குக் காரணம் என்ன? மக்களைத் தாம் அடக்கி ஆண்டோம் என்பதை ஏற்றுக் கொள்கின்றார்களா?

இல்லாது போனால், எதிரணி ஆட்சிக்கு வந்தால் தாம் வஞ்சம் தீர்க்கப்படுவோம் என எதிர்பார்ப்பதற்கு காரணம் என்ன? அவர்களை தாம் ஆட்சிக்கு வந்தபோது வஞ்சம் தீர்த்ததாக ஏற்றுக் கொள்கின்றார்களா? இவையாவற்றுக்கும் மேலாக ஐ. தே. கவினர் தமது தோல்வியை ஏற்றுக் கொள்கின்றார்களா?

இதில், எதுவாக இருந்தாலும் ஐ. தே. கவினரிடம் இன்று காணப்படும் பதற்றத்திற்கு அவர்களின் 17 வருட நீண்டகால ஆட்சியே காரணமாகும். ஜனநாயக ரீதியிலானதாக இருப்பினும் நீண்ட கால ஆட்சியானது, ஆட்சியில் இருப்பவர்களிடம் சர்வாதிகார ரீதியான போக்கை உருவாக்குவதற்கு வாய்ப்பை ஏற்படுத்துவதற்கான சந்தர்ப்பம் அதிகம். ஆனால், உலகில் நீண்டகால ஜனநாயக ரீதியான ஆட்சிகள் இல்லாமல் இருந்ததும் இல்லை. எல்லோரும் சர்வாதிகாரப் போக்கில் போனதும் இல்லை. இந்நிலையில் ஐ தே. கவின் இன்றைய நிலையானது, கடந்த கால தமது ஆட்சியைக் கண்டு தாமே அஞ்சுவதற்கு ஒப்பானதாகும்.

# ஊழலை தட்டிக்கேட்டதற்கு தூக்கிவீச முயற்சித்தனர்

## அமைச்சர்கள் குறித்து காமினி பொன்சேகா

(கொழும்பு)

நான் அரசாங்கத்தில் பிரதி சபாநாயகராக இருந்தபோது சில அமைச்சர்களின் ஊழல்கள், சுரண்டல்கள் குறித்து விசாரணை நடத்துமாறு பல முறை வேண்டுகோள் விடுத்தேன். ஆனால் அதைத் தட்டிக் கழித்தார்கள், மாறாக என்னையே தூக்கிவீச முன்வந்தனர் என காமினி பொன்சேகா கூறியுள்ளார்.

அரநாயக்கவில் இடம்பெற்ற பொதுஜன ஐக்கிய முன்னணி கூட்டமொன்றில் உரை நிகழ்த்திய அவர், ஐக்கிய தேசியக்கட்சியில் உண்மைக்கும் நேர்மைக்கும் இடமில்லை. ஊழல் புரிபவர்களுக்கே இடமுண்டு என மேலும் தெரிவித்தார்.

# தொழில்நுட்ப கல்வியில் பெரும் மாற்றம் தேவை

## கல்வி ஆணைக்குழு தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் தொழில்நுட்பக் கல்வித் துறையில் பெரு மாற்றங்கள் செய்யப்பட வேண்டுமென்று, தேசிய கல்வி ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தொழில்நுட்ப கல்வி ஒரு தேசிய முயற்சி என்றும், இதற்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டுமென்றும் ஆணைக்குழு கூறியுள்ளது. ஆணைக்குழுவின் சிபார்சுக்கமைய, பல பாடசாலைகளின் பிள்ளைகள் பயனடையும் வகையில் கேந்திர இடங்களில் தொழில்நுட்ப கல்விக்கான மூலவள நிலையங்கள் நிறுவப்படவுள்ளன.

தொழில்நுட்ப கல்வியின் தனித்துவத்தை தருவதற்கு தற்போதைய பாடவிதானங்கள் போதியளவு பயன்தருவதாக இல்லை. தேசிய தொழில்நுட்ப சங்கம் ஒன்றும் அமைக்கப்படவுள்ளதாகவும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

# போதைபொருள் குற்றசாட்டு 2பேருக்கு மரண தண்டனை

## கொழும்பு நீதிமன்று தீர்ப்பு

(கொழும்பு)

போதைப்பொருள் வழக்கில் குற்றவாளிகளாகக் காணப்பட்ட இருவருக்கு கொழும்பு மேல்நீதிமன்றம் மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்தது. சோமசுந்தரம் சேகர் என்கிற லக்கி செவன் ராஜா, பெரியசாமி பாலகிருஷ்ணன் என்ற இருவருமே தண்டனைக்குள்ளானவர்களாவர்.

20-9-1986 இல் கொட்டாஞ்சேனை ஜம்பட்டா வீதியில் 260 கிராம் மோர்பைன் போதைப்பொருள்வைத்திருந்ததாக இவர்கள்மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. இரண்டு கிராமுக்கு மேற்பட்ட போதைப்பொருளை வைத்திருப்பவருக்குமரண தண்டனை அல்லது ஆயுள் தண்டனை வழங்க சட்டம் இடமளிக்கிறது.

பிக்கப் போவதாக, பூநகரி முகாம் தாக்குதலின் போது கைதாகி புலிகளின் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருக்கும் இராணுவச் சிப்பாய் ஒருவர் தெரிவித்துள்ளார்.

லண்டன் பி. பி. ஸியின் சிங்கள சேவையாகிய சந்தேசிய செய்தியாளர் யாழ்ப்பாணம் வந்து இவரைச் சந்தித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொள்வதால்

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

### 1994. 08. 02 செவ்வாய் இரவு

08. 01 - ஊர்சுற்றும் ஒலிவாங்கி
08. 10 - அறிந்து கொள்ளுங்கள் தகவல் களஞ்சியம்
08. 20 - நலந்தானா-நிகழ்ச்சியில், ''மதுபானத்தால் ஏற்படுகின்ற பிரச்சினைகளுக்கும் நோய்களுக்கும்'' வைத்திய கலாநிதி சுப்பிரமணியம் அவர்கள் ஆலோசனை வழங்குவார்
08. 30 - செய்திகள்
08 40 - கருத்துக்களம் ''உணர்வு''
08. 50 - களமும் கானமும்'' களமாடிய தளபதி''

### 1994. 08. 03 புதன் காலை

07. 02 - மாவீரவணக்கம்
07. 15 - நீங்கள் கேட்டவை
07. 30 - செய்திகள்
07. 35 - பத்திரிகைச் செய்திகள்
07. 40 - நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

அதிகாரிகளுக்குக் கூட எம்மைப்பற்றிக் கவலையில்லை என அவர் கூறினார்.

பூநகரி தாக்குதல் பற்றி தெரிவிக்கும் போது, விடுதலைப் புலிகள் மின்னல் வேகத்தில் முகாம் மீது தாக்குதல் நடத்தினர். அவ்வேளையில் திருப்பித் தாக்க முடியாது சிதறி ஓடுவதைத்தவிர எமக்கு வேறுவழி தெரியவில்லை.

எனக்கு மிக அருகாக சன்னங்கள் பாய்ந்து சென்றதனால் பீதியுற்ற நான் அருகிலிருந்த கிணற்றில் குதித்துவிட்டேன் அப்போது புலிகள் என்னை வெளியே தூக்கி கைது செய்தனர். பின்னர் புலிகள்கவச வாகனங்களை வெளியேஎடுத்துச் சென்றனர் எனக் குறிப்பிட்டார்

## வடக்கு-கிழக்கு போர் முடியும்வரை

# புதிய தொழில்மய நாடாக சிறிலங்கா வரமுடியாது

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு போர் முடிவிற்கு வராதவரை புதிய தொழில்மய நாடு என்ற பாதையை அடைய முடியாது என பொருளாதார சட்ட வல்லுநர்கள் எச்சரித்துள்ளனர்.

இலங்கை வர்த்தக சபையின் முன்னைய தலைவர் இது பற்றிக் கூறுகையில் வடக்கு-கிழக்கு போர் தீராத தண்டனையாகக் கருதப்படும் கொள்ளை நோய் அதை முடிவிற்குக் கொண்டுவருவது எந்தவொரு அரசினதும் நேர்மையான, அடிப்படையான அரசியல் அபிவிருத்தி முன்னுரிமையாகும்.

இன்றைய தேர்தல் காலசூழ் நிலையில் எமது அரசியல் கட்சிகளைக் கருத்தில் கொள்ளாது தேசிய பிரச்சினைகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் சிறிலங்காவின் அபிவிருத்திக்கு மிகத் தடையாக இருப்பது வடக்கு-கிழக்கு போராகும் பல விலை மதிக்க முடியாத மனித உயிர்களையும் பெறுமதி மிக்க வளங்களையும் அழித்துக் கொண்டு கடந்த ஒரு சகாப்தமாக இது தொடர்கிறது.

ஆதலால் எல்லா அரசியல் கட்சிகளதும் கவனமும் இந்தப்போரை முடிவிற்குக் கொண்டுவருவதில் செலுத்தப்படல் வேண்டும் போரை முடிவிற்குக் கொண்டு வராமல் புதிய தொழில்மய நாடு என்ற நிலையை அடைவது முடியாத ஒருகாரியமாகும்.

அப்படி அடைந்தாலும் வசதியான வாழ்க்கைத்தரம் எங்களின் மக்களைப் பொறுத்தவரை பெறுமதி அற்றதாகும் பீதிகலந்த ஒற்றுமையற்ற சமூகத்தில் வாழ்வதாகும்.

போரை முடிப்பதனால் அதற்கு செலவிடும் 22 கோடியையும் பொருளாதார துரித மேம்பாட்டிற்கு பயன்படுத்த முடியும் என்றார்.

# அதிபர்கள் கூட்டம்

தெல்லிப்பழை, சண்டிலிப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலைகளின் அதிபர்கள் கூட்டம் நாளை புதன்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு யா/மானிப்பாய் இந்துக்கல்லூரியில் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு த. துரைசிங்கம் தலைமையில் நடைபெறும்.

# வன்முறையை கட்டுப்படுத்தமுடியாது போலிசார் திட்டவட்டமாக தெரிவிப்பு

## அரசியல் தலையீடுகள் காரணமாம்

(கொழும்பு)

சிறிலங்காவில் தேர்தல் வன்முறைகள் பெருமளவில் அதிகரித்துள்ளதாகவும் இதனைக் கட்டுப்படுத்த தம்மால் முடியாதுள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளதாகவும் பி.பி.ஸி. தெரிவித்தது.

பி.பி.ஸி. வானொலியின் கொழும்புச் செய்தியாளர் இது பற்றித் தெரிவிக்கையில் எதிர்வரும் 16ஆம் திகதி சிறிலங்காவில் நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலை ஒட்டி இதில் போட்டியிடும் கட்சிகளின் பிரசாரங்கள் சூடுபிடித்துள்ளன.

இந்நிலையில் தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் தென்பகுதியில் நாளுக்கு நாள் அதிகரித்தவண்ணமே உள்ளன. தொடரும் வன்முறைச் சம்பவங்களைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில் பொலிசார் திண்டாடுகின்றனர். தற்போது இவ் வன்முறைகளைத் தம்மால் கட்டுப்படுத்த முடியாது என பொலிசார் திட்டவட்டமாக அறிவித்துள்ளனர்.

ஐ தே. கட்சி ஆதரவாளர்களே இவ் வன்முறைகளில் பெருமளவில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களின் பின்னணியில் மூத்த அரசியல்வாதிகளும்இவர்களின் கையாட்களும் இருக்கின்றமையே இதனைக் கட்டுப்படுத்த முடியாமல் இருப்பதற்குக் காரணம் என சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

வன்முறைகளை அடக்கப் பொலிசார் தம்மால் முடியாது என தெரிவித்ததைத் தொடர்ந்து பாதுகாப்பு அமைச்சு இராணுவத்தினரும், பொலிசாரும் இணைந்த கூட்டுப் பாதுகாப்புக் குழுவை நியமித்துள்ளது. இக்குழு வன்முறைகளைக் கட்டுப்படுத்த பொலிசாருக்கு உதவும் எனவும் கூறப்படுகிறது

## தேர்தல் கடமைகளில் 50ஆயிரம் பொலிசார்

ஆகஸ்ட் 16ஆம் திகதி நடைபெறவிருக்கும் பாராளுமன்றத்தேர்தலின்போது 50,000 பொலிசாரை கடமையில் ஈடுபடுத்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸ்மா அதிபர் பிராங்க் டீ சில்வா தெரிவித்துள்ளார்.

இவர்களில் 37,000 பேர் வாக்குச்சாவடிகளில் நிறுத்தப்படுவர் என்றும் ஏனையோர் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவார்கள் என்றும் பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார்.

மேலும் 5130 வாகனங்கள் பொலிசாரின் பாவனைக்காக தயார் நிலையில் வைக்கப்பட்டிருப்பதாகவும் 63 பஸ்கள், 142 கனரக டிரக் வண்டிகள் 84 சிறியடிரக்குகள்,2752 ஜீப்புகள், 141 கார்கள், 1948 மோட்டார்சைக்கிள்கள் ஆகிய வாகனங்களே பொலிசாரின் தேர்தல் கடமைகளுக்கென ஒதுக்கப்பட்டுள்ளன.

# ஆதரவாளர் கொலைக்கு சிறிமாவோ கண்டனம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்களின் தாக்குதலினால் இதுவரை பொது ஜன ஐக்கிய முன்னணியின் பதினொரு ஆதரவாளர்கள் கொலை செய்யப்பட்டதாக சுதந்திரக் கட்சியின் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக இருப்பதால் உங்கள் கட்சியினரின் கொலைகளை மூடிமறைக்க முற்படலாம், ஆனால் இன்று வரை நாட்டின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி என்ற நிலையில் நாட்டு மக்களின் முழுப் பாதுகாப்பும் உங்களிடம் இருப்பதை நீங்கள் மறந்து விட்டீர்கள் என அக்கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழீழத்தினைத் தெரிந்து கொள்ளுங்கள் வினாவிடைப்

### மர்ம

ராடர் நிலையம் அவதானித்து சிறிலங்கா விமானப் படையினருக்கு அறிவித்தது.

இதனை அடுத்து சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான சீனத் தயாரிப்பு ஜெட் விமானங்கள் இரண்டு இவ் விமானத்தை கண்காணித்து, அவ் விமானங்களில் ஒன்றிலிருந்து மர்ம விமானத்துடன் தொடர்பு கொள்ளப்பட்டது. மர்ம விமானத்தை கொழும்பில் உடனடியாக இறக்குமாறு பணிக்கப்பட்டது,

இதனையடுத்து இவ் விமானம் அமெரிக்க விமானப் படைக்குச் சொந்தமானது எனவும் டியார்கோ கார்சிகா விமானத் தளத்திலிருந்து புறப்பட்ட இவ் விமானம் தொழில் நுட்பக் கோளாறு காரணமாக கொழும்புக்குச் சமீபமாக இவ் வாறு பறக்க நேர்ந்தது எனவும் தெரியவந்தது.

### இரண்டு

அதிகளவு வைத்திய அதிகாரிகளை வடபகுதிக்கு நியமிக்க முடியாத நிலையில் தாம் இருப்பதாக ஐ. நா. பிரதிநிதிகள் தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

### ஐக்கிய

வாரெனவும் தெரிவித்திருந்தார்- இதனால் ஹேமா ஐ-தே-க வில் முன்னிலைக்கு வருவார் எனவும் அவர் கூறியிருந்தார்-

ஆனால், தான் தனது முடிவை மாற்றிக்கொண்டதாக ராஜபக்ச தொலைபேசி மூலம் பின்னர் சண்டேலீடருக்கு அறிவித்துள்ளார்.

முன்னர் சண்டேலீடருக்கு, அவர் அளித்தகருத்துரையில், கொழும்பு மத்தி மக்கள் ஹேமாவையோ அவரது புத

## கண்காணிக்க சம்மதம்

(கொழும்பு)

வடக்கில் தீவுப்பகுதிகளில் தேர்தலைக் கண்காணிப்பதற்கு, சர்வதேச மனித உரிமைகளுக்கான சட்ட அமைப்பு சம்மதம் வெளியிட்டுள்ளது.

வாஷிங்டனைத் தலைமையகமாக கொண்டு இயங்கும் இவ்வமைப்பு பிரதிநிதிகள் தற்போது கொழும்பில் தங்கியுள்ளனர்

தாங்கள் வடக்கிற்கு செல்ல திட்டமிட்டாலும், இலங்கை அரசின் பணிப்பில்லாமல் முழுமையான முடிவுகளை எடுக்க முடியாது என அவ்வமைப்பின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்துள்ளார்.

### புலிகளின்

கொண்டனர். இந்நிகழ்வின் போது மங்கள விளக்கை கிளிநொச்சிக் கோட்ட நிர்வாக சேவைப் பொறுப்பாளர் இளஞ்சீரன், முல்லைக் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் அதியமான், வவுனியா கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் குமணி ஆகியோர் ஏற்றிவைத்தனர் நிர்வாக சேவைப் பெயர்ப்பலகையை வன்னி மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் ஞானம் திரை நீக்கம் செய்துவைத்தார். புதிய பணியகம் தமிமீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் டொமினிக் அவர்களால் சம்பிரதாயபூர்வமாக நாடா வெட்டி திறந்துவைக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து மேஜர் வாசன் நினைவு மண்டபம் வவுனியாக் கோட்ட சிறப்புப் பொறுப்பாளர் குட்டிமணியால் திறந்து வைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து வவுனியாக் கோட்ட நிர்வாக சேவைப் பொறுப்பாளர் குலதீபன் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதில் விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவன பிரதி நிதிகள் உரை நிகழ்த்தினர்

இதனையடுத்து நிர்வாக சேவைப் பணியாளர்களின் சத்தியப் பிரமாணம் எடுக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

### உயர் அதிகாரிகள்

காரி ஒருவர் தெரிவித்தார்-

இதேவேளை தேர்தல் முடிவடைந்த பின்னரும் இரு வாரங்களுக்கு கட்சி அதிகாரி

# தேர்தல் பிரசாரத்திற்கு உதவுமாறு ஜே. ஆர், ஹேமாவிடம் கோரிக்கை

## இறுதி நேரத்தில் உத் வேகம் தாருங்கள்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியை நெருக்கடியிலிருந்து காத்து தேர்தலில் வெற்றியீட்ட வழிசமைத்துத்தருமாறு அதன் உயர் தலைவர்கள் முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர்- ஜெயவர்த்தனா மற்றும் ஹேமா பிரேமதாசா ஆகியோரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்-

இது தொடர்பாக ஜே- ஆர்- ஜெயவர்த்தனாவிடம் வினாவியபோது. தன்னிடம் ஐ- தே- க- இறுதி கூட்டத்தில் கலந்து கொள்ள பல அழைப்புக்கள் வந்தது உண்மை என்றும் ஆனால், தான் எந்த ஒரு அரசியல் கூட்டத்திலும் கலந்து கொள்ளப் போவதில்லை என தீர்மானித்து இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்-

இதேவேளை ஹேமா பிரேமதாசாவிடம் கேட்டபோது அவர் கண்டி மாவட்டத்தில் போட்டியிடும் ஏ- சீ- எஸ்- ஹமீட், கம்பஹா மாவட்டத்தில் போட்டியிடும் ஜோசப் மைக்கல் பெரேரா, கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடும் டிறோன் பெர்னான்டோ உட்பட பலரிடம் இருந்து தனக்கு அழைப்பு விடுக்கப்பட்டதாகவும்இருந்தபோதிலும் தான் எந்த தேர்தல் மேடையிலும் பிரசாரம் செய்யப்போவதில்லை என்றும் தெரிவித்தார்-

## அமைச்சர் பிணையில்

(கொழும்பு)

நீதிமன்றத்தினால் பிடி ஆணை பிறப்பிக்கப்பட்டிருந்த தபால் தொலைத் தொடர்பு அமைச்சர் எம்-எஸ்- அதிகாரி நேற்று கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டார்-

கொலையுண்ட ஆர். எஸ். பியசேனா தாக்கப்பட்ட சமயத்தில் அமைச்சர் அதிகாரி அங்கு இருக்கவில்லை என்றும் சற்று தொலைவில் இருந்தார் எனவும் அமைச்சரின் சார்பில் வாதாடிய சட்டத்தரணி தெரிவித்துள்ளார்.

இதேவேளை அமைச்சர் அதிகாரி, கொலையைச்செய்த கும்பலுடன் காணப்பட்டார் என சாட்சியங்கள் தெரிவித்தால் உடனே அவர் விளக்கமறியலில் வைக்கப்படுவார் என நீதிபதி தெரிவித்துள்ளார்.

### பேரினவாதி

ளது லண்டனில் இருந்து வெளியாகும் தமிழ் டைம்ஸ் ஜூன் 15 இதழில் இக்கடிதம் வெளிவந்துள்ளதாக அச்செய்தி கூறுகிறது

அக் கடிதத்தில் மேலும் எங்கள் எதிரிகள் யார்? நண்பர்கள் யார்? என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும் தமிழர் ஒரு கோரிக்கையையும் முன்வைப்பதால் பிரச்சினைக்குத் தீர்வுகாணமுடியாது எனவே இரு சமூகங்களும் மேற்கொள்ளும் அணுகுமுறையை மாற்றுவது அவசியமாகிறது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து கருத்துத் தெரிவித்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் தர்மசிறி சேனநாயக்க, இக் கடிதத்தை பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் இணைந்து கொள்ள முன்னர் அஷ்ரப் எழுதியுள்ளதாகவும் பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் உடன்பாட்டிற்கு வந்த பின்னர் இனப்பிரச்சினை குறித்து புதிய நிலைப்பாடொன்றிற்கு அஷ்ரப் வந்துள்ளதாகவும் தெரிவித்தார்

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பசுபதிப்பிள்ளை புனிதவதி

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பசுபதிப்பிள்ளை புனிதவதி கொழும்பில் 01-08-94 அன்று காலமானார். அன்னார் ஏரம்பு பசுபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான நமசிவாயம், பார்வதிப்பிள்ளையின் அன்பு மகளும், லலிதாதேவி, சர்வேஸ்வரி, சிவநேசன், லோகநாதன், பத்மநாதன். கலைவாணி, குகதாசன், சிவகுமார் ஆகியோரின் அன்புத் தாயாரும், பூபாலபிள்ளை, சண்முகரெட்ணம், சாமிளா, யோகேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற கைலாசபதி, மலர்மகள், செவ்வந்திநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், கஜமுகன், கயல்விழி, நர்மதா, நமசிவாயம், மயூரன், சண்முகப்பிரியா. சொரூபன், அபிராமி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

சிவகுருலேன்,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

தகவல்:
ஏ. பசுபதிப்பிள்ளை
(9000)

## திருமதி சிவகுருநாதன் சண்முகசுந்தரம்

கோப்பாய் வடக்கு மலேயன் பென்ஷனர் காலஞ்சென்ற சிவகுருநாதன் அவர்களின் மனைவி சண்முகசுந்தரம் 1994 ஆகஸ்ட் 1-ம் திகதி தனது இல்லத்தில் காலமானார். அன்னார் நம்பியாரூரன், உமாதேவி ஆகியோரின் தாயாரும், யோகீஸ்வரன் (இளைப்பாறிய லிகிதர் - வவுனியா) அருள்மலர் ஆகியோரின் மாமியாரும் வேலாம்பாள் தாமோதரம்பிள்ளையின் சகோதரியும், மங்கையற்கரசி அருணாசலத்தின் (கொழும்பு) மைத்துனியும் அமரேசன், குகனேசன், கௌரி (இணைந்த பல்கலைக் கழகம்- வவுனியா), தாரணி, பவானி, கணேசன், கேதீசன். சுமித்திரா, ஜயந்தி, ரவீந்திரன், ஆஷா, உசா ஆகியோரின் பாட்டியாரும் ஆவார், இறுதிச் சடங்குகள் 1994 ஆகஸ்ட் மாதம் 2-ம் திகதி இன்று பி.ப 3 மணியளவில் நடைபெறும்- இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள்

## வினாவிடைப் போட்டி

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் உட்கட்டுமானப்பகுதியால் எதிர்வரும் நல்லூர் திருவிழாவின் போது மாணவர்களுக்கு இடையே இப்போட்டி நடாத்தப்படும்-

**போட்டிமுறை**

★ பல சுற்றுக்களாக நடாத்தப்படும் போட்டியில் தெரிவு செய்யப்படுபவர்களுக்கு இடையே இறுதிச் சுற்றுப்போட்டி நடாத்தப்படும்.

★ இறுதிச்சுற்றுப்போட்டியில்முதலிடம்பெறுபவருக்கு முழுநிறைவான தங்கப்பதக்கம் வழங்கப்படும்.

★ ஏனைய சுற்றுக்களில் வெற்றிபெறுபவர்களுக்கும் பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

★ தமிழீழத்தின் பௌதீகச்சூழல், பௌதீகவளம், குடித்தொகை, பொருளாதாரஅமைப்பு, வளர்ச்சி, வரலாறு, அரசியல் ஆகியன பற்றிய பொது அறிவினை மாணவர்களிடையே வளர்க்கும் வகையில் இப்போட்டிக்கான வினாக்கள் அமையும்-

**போட்டிக்கான விதிகள்**

★ 18 வயதுக்கு உட்பட்ட மாணவர்கள் இப்போட்டியில் கலந்து கொள்ளலாம்.

★ தமது விண்ணப்பங்களை தமது கல்லூரி அதிபர்கள் அல்லது தமதுபகுதி கிராமசேவை அலுவலர்களைக் கொண்டுஉறுதிப்படுத்தி அனுப்பிவைக்க வேண்டும்-

★ விண்ணப்ப முடிவுத்திகதி:- 15-08-1994

★ விண்ணப்பங்களை

''தமிழீழத்தினைத் தெரிந்து கொள்ளுங்கள்''
உட்கட்டுமானப் பகுதி,
**தமிழீழ பொருண்மிய
மேம்பாட்டு நிறுவனம்**
இல. 10, சம்பியன் வீதி,
கொக்குவில்.

என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

★ இதற்கான விண்ணப்பப் படிவங்களை சகல புத்தகசாலைகள், உட்கட்டுமானப் பகுதி ஆகிய இடங்களில் 5/- ரூபா செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

உட்கட்டுமானப் பகுதி,
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்.
(சி-10020)

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 02ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

கொழும்பு மத்தி மக்கள் ஹேமாவையோ அவரது புதல்வர்களையோ மறக்கவில்லை, ஹேமாவின் இதயம் ஐ. தே. க பாலிருப்பதை நான் அறிவேன் என்றும், ஹேமாவுக்கு இடந்தர முயற்சிக்கும் ஐ. தே. கவின் எந்தச் செயற்பாடுகளுக்கும் தான் ஆதரவு தருவேன் எனவும் தெரிவித்திருந்தார்.

ரட்ணசிறி ராஜபக்சவின் எண்ணங்கள் குறித்து தனக்கு எதுவும் தெரியவரவில்லை என ஹேமாவும் சண்டேலீடருக்கு தெரிவித்துள்ளார்.

### பூநகரி

பரில் பூநகரி முகாம்மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் கொல்லப்பட்ட நூற்றுக்கணக்கான படையினரின் சடலங்கள் மூன்று பெரிய சவக்குழிகள் வெட்டி புதைக்கப்பட்டு அவற்றின்மேல் சமாதி கட்டப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் உலகக் கோப்பை கால்பந்து போட்டியை தாம் தொலைக்காட்சியில் பார்த்துக்கொண்டிருந்த வேளை விடுதலைப் புலிகள் திடீரென முன்னிலை காவலரண்களை தாக்க ஆரம்பித்ததால் தாம் அப்போட்டியின் முக்கிய கட்டத்தை தவறவிட்டுவிட்டதாக முகாம் பொறுப்பதிகாரி கேணல் சிசிர விஜேசூரிய குறிப்பிட்டதாக அச் செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

### புதுக்குடியிருப்பு

கினை தியிட்டுக் கொழுத்தினர். இதனால் படகும் உபகரணங்களும் முற்றாக எரிந்து நாசமாகின. சம்பவம் நடைபெற்று பலமணி நேரத்தின்பின் ஒருவர் நீந்திக் கரை சேர்ந்தார்.

மணல் குடியிருப்பைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான செபஸ்தியாம்பிள்ளை அருந்தவராஜா என்ற மீனவர் காணாமல் போயுள்ளார்.

வடைந்த பின்னரும் இருவாரங்களுக்கு கட்சி அதிகாரிகளுக்கும் அரசாங்க உயர்அதிகாரிகளுக்கும் இதேபோன்ற பாதுகாப்பு வழங்கப்படவுள்ளது-

விசேட அதிரடிப் படையினர் உட்பட பொலிசாரையும் கொண்ட 200 பேரைப் பயன் படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது-

இதேவேளை பாதுகாப்புக் கோரி அனுப்பப்படும் விண்ணப்பங்கள் தொடர்ந்து அதிகரித்து செல்வதாகவும் இருந்த போதும் போதுமான அளவில் பாதுகாப்பு உத்தியோகத்தர் இன்மையினால் இது மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் சிரேஷ்ட அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்-

தற்போது அரசியல் கட்சிகளுக்கு போதிய அளவுபாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதா என கேட்ட கேள்விக்கு கட்சிகளுக்கு முழுமையான பாதுகாப்பை பாதுகாப்பு அமைச்சினால் வழங்க முடியவில்லை என தெரிவித்தார்-

### எதிர்வரும்

ணியையே ஆதரிப்பது தெரிய வந்துள்ளது எனக் குறிப்பிட்டுள்ளது இதன்படி பார்க்கையில் மொத்தத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு 51. 9 சதவீத வாக்குகள் உள்ளன எனவும் அந் நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

மேற்கொண்ட கருத்துக் கணிப்பிலிருந்து இருபிரதான கட்சிகளுக்கும் இடையில் நெருங்கிய போட்டி இருப்பதாகவும் எக்கட்சியும் பெரும்பான்மை பெறமாட்டாது எனவும் தெரிவிக்கப்படுகிறது மாணவர்கள் மட்டத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு செல்வாக்குள்ளது. புத்தி ஜீவிகள் மட்டத்தில் இரு கட்சிக்குமே எதிர்ப்பு காணப்படுகிறது அவர்கள் வேறு கட்சிகளையே விரும்புகின்றனர் எனவும் அந் நிறுவனம் கருத்து தெரிவித்துள்ளது.

புதிய நிலைப்பாடொன்றிற்கு அஷ்ரப் வந்துள்ளதாகவும் தெரிவித்தார்

### ஐ.தே.க

ற்கை உறுப்புகளைத்திருத்துவதற்காகக் காத்திருக்கின்றனர். தந்தைமாரை இழந்து ஆயிரக்கணக்கானசிங்களக்குடும்பங்கள் தவிக்கின்றன. எண்ணுக்கணக்கற்ற சிங்களக் குடும்பங்களின் ஆண்பிள்ளைகள் யுத்தத்தில் மடிந்துள்ளனர். எனினும் வடக்கு-கிழக்கில் மூன்றிலிரண்டு பகுதியை பெரும்பான்மையுள்ள சிங்களவர் என்றுமே அடையமுடியாது என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மீன்பிடி

குகளிலும் இரண்டுபேர் சகிதம் இரண்டு படகுகளிலும் நேற்று முன்தினம் அதிகாலை நாகர்கோவில் கடற்பரப்பில் கரையில் இருந்து சுமார் ஒன்றரைக் கிலோ மீற்றர் தூரத்தில் இவர்கள் மீன்பிடியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த வேளை அவ்வழியாக வந்த கடற்படையினர் இவர்களை நோக்கி சரமாரியாகதுப்பாக்கிப்பிரயோகத்தினை மேற்கொண்டனர். இதனை அடுத்து அந்த நான்கு மீனவர்களும் கடலில் குதித்து நீந்தினர். இதில் மூவர் மட்டுமே உடன் கரைவந்து சேர்ந்தனர்.

நான்காவது மீனவரான வி. சிவபாத சுப்பிரமணியம் என்பவர் சுமார் 11 மணித்தியாலங்கள் கடலில் நீந்தி அன்றையதினம் பிற்பகல் 2.00 மணிக்கு கரைவந்து சேர்ந்தார்.

இவர்கள் நீந்திவந்து கொண்டிருக்கையில் கண்ணுக்கு எட்டிய தூரம் வரை இவர்களின் படகுகள் கடலில் இருந்ததாக தெரிவித்தனர். கடலில் தாம் கைவிட்டுவிட்டு வந்த தமது உபகரணங்களை மீட்டுத்தரும்படி யாழ். செயலகத்தில் முறைப்பாடு ஒன்றையும் செய்துள்ளனர் என தெரியவருகின்றது, (பா)(சி)

டியாரும் ஆவார், இறுதிச் சடங்குகள் 1994 ஆகஸ்ட் மாதம் 2-ம் திகதி இன்று பி.ப 3 மணியளவில் நடைபெறும்- இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்:

மகேந்திரா வீதி,
கோப்பாய் வடக்கு,
கோப்பாய்-

தகவல்
நம்பியாரூரன் (மகன்)
(8999)

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு:
08 - 06 - 1938

உதிர்வு:
13 - 08 - 1993

அமரர்
**சின்னத்தம்பி மகேந்திரநாதன்**
[உரிமையாளர் ஜெனரல் மோட்டோர்ஸ்]

வசந்தத்தில் வீசிய காற்று
சுகந்தம் தராமல் போயிற்று
இல்லறச் சூரியன் அஸ்தமனம் கண்டு
வாசம் இழந்து வாடி மலர்களானோம் .....

உங்கள் நினைவுகளைச் சுமந்து
தளிர்க்கும் இலையுதிர்கால மரங்கள் நாம்
வாழ்ந்திட்ட வருடங்களுக்கு பின்
உங்கள் வாழ்வினை நேசிக்கின்றோம் ஓராண்டில்

விழித்திரையிலிருந்து விலகினாலும்
மனத்திரை தன்னில் மலர்ந்து நிற்கும்
எங்கள் குலவிளக்கே.

- மனைவி, மக்கள்

'வளர்மதி'
பல்கலைக்கழகச்சந்தி
திருநெல்வேலி.

சில்ரன் போட்டோ, பேபி போட்டோ
திருநெல்வேலி. திருநெல்வேலி.

(8994)